11.06.2026 Mcop 433/2021 ம.சா1 கணேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

தற்போது எனக்கு 23 வயதாகிறது. விபத்து நடக்கும் போது நான் மைனர் என்றால் சரிதான். விபத்து 16.01.2021 ம் தேதி நடந்தது. ஆழ்வார்குறிச்சி பாலத்திற்கு முன்பு வைத்து விபத்து நடைபெற்றது. பேரூந்து வந்து என் மீது வந்து மோதியது. விபத்தினால் எனக்கு வலதுகை துண்டிக்கப்பட்து. முகங்களில் காயங்கள் ஏற்பட்டது. நான் 1 ம் எதிர்மனுதாரர் பேரூந்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஒட்டி வந்ததால் விபத்து ஏற்பட்டதாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதியறிக்கை என் மீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயம் நான் மைனர் என்பதால் எனக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் வாகனத்தை நான் ஒட்டியதாகவும், நான் தாக்கல் செய்த மனுவில் வாகனத்தை ஆறுமுகச்சாமி ஒட்டியதாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் நான் தான் வாகனத்தை ஒட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ 3 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் நான் தான் வாகனத்தை இயக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கு தொடர்பாக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. எனக்கு எதிரான குற்ற வழக்கில் நான் விடுதலை செய்யப்பட்டுள்ளேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களுக்குரிய மருத்துவ பரிந்துரை சீட்டுக்கள் தாக்கல் செய்யாதால் மருத்துவ பில்கள் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய காப்பீடு கழகத்தை பொறுத்து நான் 3 ம்

தரப்பினர் இல்லை என்றால் சரிதான். விபத்து 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவாலும், விபத்து சமயம் எனக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்பதாலும், 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து நான் 3ம் தரப்பினரர் இல்லை என்பதாலும் 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(Sd)K.சுதா ராணி,
கூடுதல் சார் நீதிபதி,
தென்காசி.